**வரையறுக்கப்பட்ட ஸ்டேட் பேட்டிலைசர் கம்பனியின் 31 மார்ச் 2025இல் முடிவடையும் ஒன்பது மாத செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுக்கல் வாங்கல் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட எஸ்டேட் பேட்டிலைசர் கம்பனியின் 2025 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற ஒன்பது மாதகாலப்பகுதியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) (ஈ) மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் | இந்த கால எல்லையில் கம்பனி ஒன்றிணைந்ததன் காரணமாக இரண்டு கம்பனிகளிடம் 04 நிதி அறிக்கைகள் (2024 மார்ச் 31 மற்றும் 2024 யூன் 30) தயாரிக்க வேண்டி ஏற்பட்டிருந்தமையும் புதிய மென்பொருள் முறைமை ஒன்று கம்பனியின் பணிகளுக்காக பொருத்தமான பிரகாரம் அபிவிருத்தி செய்து ஸ்தாபிப்பதற்கும் மற்றும் அந்த மீதிகளை உள்ளடக்குவதற்கும் ஏற்பட்ட பணிகளின் காரணமாக 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

2024/2025 இன் நிதி ஆண்டிற்கு உரிய 2025 மார்ச் 31 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

போது தாமதம் அடைந்திருந்ததுடன் விரைவாக நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு 2024 யூலை 01 ஆந் திகதி முதல் ஒன்றிணைந்த கம்பனி 2024 யூலை 24 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்டேட் பேட்டிலைசர் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது. முன்னர் காணப்பட்ட கோரப்பட்ட இரண்டு கம்பனியினாலும் 2024 யூன் 30 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட இறுதி மூன்று மாத காலப் பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், உரித்துக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பெறுமதி மற்றும் கம்பனியால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான சொத்துக்களின் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிகள் தொடர்பாக கவனத்தில் கொண்ட பின்னர் புதிய கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அந்தப் பெறுமதி நாட்குறிப்புக்களின் மூலம் உள்ளடக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி** | **வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி** | **வரையறுக்கப்பட்ட ஸ்டேட் பேட்டிலைசர் கம்பனி 2024 யூலை 01 இல் உள்ளவாறு** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 5,749,924,251 | 911,973,349 | 6,661,897,600 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 19,012,684,672 | 14,985,392,515 | 33,998,877,187 |
| மொத்த சொத்துக்கள் | 24,762,608,923 | 15,897,365,864 | 40,659,974,787 |
| உரிமையாண்மை | 8,865,407,018 | 4,188,877,729 | 13,054,284,747 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 9,754,930,014 | 5,029,084,779 | 14,784,014,793 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 6,142,271,889 | 6,679,403,356 | 12,821,675,245 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | 24,762,608,923 | 15,897,365,865 | 40,659,974,788 |
| வருமானம் | 393,982,490 | 323,156,818 | 717,139,308 |

| | | | |
|---|---|---|---|
| செலவினம் | 869,518,812 | 396,187,539 | 1,265,706,351 |
| வரிக்குப் பின் இலாபம் / நட்டம் | (475,536,322) | (73,030,721) | (548,567,043) |

**2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னர் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் வளவில் அமைந்துள்ள இலக்கம் 07 களஞ்சியத்தில் காணப்பட்ட மெற்றிக்தொன் 4,350 MOP உர இருப்பை மீண்டும் பொதியிடல் பணிகளின் போது கம்பனியின் விநியோக முகாமையாளரின் அறிக்கை மற்றும் இயந்திர வழங்குனரின் அறிக்கையின் பிரகாரம் மீண்டும் பொதியிடப்பட்ட உரத்தின் அளவு முறையே மெற்றிக்தொன் 4,349.3 மற்றும் மெற்றிக்தொன் 4,324.5 இன் காரணமாக உரம் மெற்றிக்தொன் 24.8 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் முதல் இதுவரை அந்த களஞ்சியத்தில் உள்ள MOP உர இருப்பு கணிப்பிட முடியாத வகையில் பொதியிடப்பட்டதன் காரணமாக உர இருப்பு பௌதீக ரீதியில் சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது. | இந்தக் களஞ்சியத்தில் இருப்பு சேகரித்தலின் பிரகாரம் ஒட்டுமொத்த எம்.ஓ.பீ இருப்பு அடுக்காக 07 பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 05 பகுதிகளின் உர இருப்பு கணிப்பிடக் கூடியாத இருந்ததுடன் 02 பகுதிகள் கணிப்பிட முடியாத நிலையில் காணப்பட்டது. எனினும் இதுவரை இந்த கணிப்பிட முடியாத இருப்புக்கள் இயந்திரப் பொறிமுறை இன்றி மீண்டும் பொதியிடும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | வேறுபாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 பெற வேண்டிய மீதி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 401 கமநல சேவை நிலையங்களில் இருந்து கம்பனிக்கு அறவிட வேண்டி இருந்த மொத்தப் பெறுமதி ரூபா 262,300,789 ஆக இருந்ததுடன் அதில் 23 கமநல சேவை நிலையங்களில் இருந்து அறவிட வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 4,590,340 தொகை 05 வருடங்களை விஞ்சிய மீதியாகும். எனினும் ஏனைய கமநல சேவை நிலையங்கள் 12 இற்குரியதாக பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் மீதி ரூபா 9,373,358 | இதில் குறிப்பிடப்பட்ட ரூபா 262,300,789 ஆன கமநல சேவை நிலையங்களில் இருந்து அறவிட வேண்டிய தொகையில் ரூபா 4,590,340 ஆன தொகை 2006 ஆம் ஆண்டு முதல் கடனுக்கு வழங்கப்பட்ட உரத்திற்காக அறவிட வேண்டி காணப்பட்ட தொகை ஆகும். இந்த தொகை 23 கமநல சேவை நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவர்களினால் மீதி உறுதிப்படுத்தல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே இதில் குறிப்பிடப்பட்ட 12 கமநல சேவை நிலையங்களின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட | அறவிட வேண்டிய கடன் பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தி உரிய அறவீடுகளை தாமதம் இன்றி மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆக இருந்ததுடன் கம்பனியின் பதிவேடுகளின் பிரகாரம் அந்த மீதி 9,562,187 ஆனதன் காரணமாக ரூபா 188,829 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பெறுமதிக்கும், அந்த கம்பனியில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 188,829 வேறுபாடு காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் தாக்கமளிக்கக் கூடியதாக இருந்தது. 10 வருடங்களுக்கு மேற்பட்ட குறைந்த கால எல்லையில் கமநல சேவை நிலையங்களில் இருந்த அறவிட வேண்டிய கடன், அறவிடுவதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு அதற்காக தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 05 வருடங்களை விஞ்சிய விநியோகிப்பாளர்கள் மூன்று பேர்களிடம் இருந்து (Distributors) அறவிட வேண்டிய ரூபா 42,952,877 ஆன கடன்பட்டோர் மீதியும், 07 பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 993,423 ஆன கடன் மீதியும், தனியார் கடன்பட்டோரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 65,442,258 கடன்பட்டோர் மீதியும் காணப்பட்டதுடன் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களை விஞ்சிய விநியோகிப்பாளர்கள் மூன்று பேரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 42,952,277 கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு 07 பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 993,423 தொகை 1994 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதியாக இருந்தமையால் மற்றும் அதற்குரிய கோவைகள் மற்றும் தகவல்களை கண்டறிய முடியாதிருந்தமையால் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு கோரி அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். தனியார் கடன் பட்டோர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 65,442,258 தொகை 2016/17 நிதி ஆண்டுகளின் போது திறந்த சந்தையில் கடன் வழங்கிய உரத்திற்காக அறவிடுவதற்கு உள்ள தொகையாகும். இந்த பணத்தை அறவிடுவதற்காக கடன்பட்டோர் சிலருக்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்தி உரிய அறவீடுகளை தாமதம் இன்றி மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | கடன் அடிப்படையில் உரத்தை பகிர்ந்தளிப்பதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 37,833,346 மீதியிலும், அம்பாறை மாகாண விவசாய அலுவலகத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 12,543,845 மீதியும், அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தில் இருந்து | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட உரத்திற்காக அறிவிட வேண்டிய நிதி தொடர்பாகவும், 2025 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதத்தின் போது விவசாய அமைச்சின் செயலாளரின் தலைமையில் தீர்வினைப் பெற்று வழங்கும் வகையில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அம்பாறை | அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்தி உரிய அறவீடுகளை தாமதம் இன்றி மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிட வேண்டிய ரூபா 35,931,679 மீதியும், தெங்கு பயிர்செய்கை சபையில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 6,007,018 மீதியும், தெல்வத்த சீனிக் கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 807,650 மீதியும், இக்பாகமுவ நெல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 120,500 மீதியும் பணாகொட இராணுவ தலைமை அலுவலகத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 11,500 மீதியும் ஆக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 93,255,538 கடன்பட்டோர் மீதி அறவிடுவதற்கு கம்பனி தொடர்ந்தும் தவறியிருந்தது. | பிரதி விவசாயப் பணிப்பாளரினால் கடன் தொகை செலுத்தாமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் செயல் முன்னேற்றத்தை விசாரித்து 2023.07.10 ஆந் திகதி மற்றும் 2024.02.06 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு இதுவரையில் செயற்படு நிலையில் காணப்படுகின்ற விவசாய சங்கங்களின் தகவல்களைப் பெற்று விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தெங்குப் பயிர்ச் செய்கை சபைக்கு 2023 ஆம் ஆண்டில் கடனுக்கு வழங்கப்பட்ட உரத்திற்காக அறவிடுவதற்கு உள்ள பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் பொல்வத்த சீனிகம கமநல சேவை அறவிடுவதற்கு உள்ள கடன் தொகை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் தொடர்ந்தும் கண்டறிவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறு இக்பாகமுவ நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து பலாங்கொட இராணுவ தலைமையத்தில் இருந்தும் அறவிட வேண்டிய ரூபா 132,500 தொகை விவசாய அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் கடனுக்கு வழங்கப்பட்ட உரத்திற்கு உரிய பணமாக இருந்ததுடன் 2025/26 கடப்பாடுகள் பொறுப்புக்களின் மூலமும் இந்த நிதி விவசாய அமைச்சின் மூலம் கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

**2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் பழைய கம்பனியின் பெயரில் பேணிச் செல்லப்பட்ட 05 வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்கும், சேமிப்பு வங்கிக் கணக்குகள் 06 இனை புதிய கம்பனியின் பெயரில் முன்கொண்டு செல்வதற்கும் கம்பனி ஒன்றிணைத்து 06 மாதங்களின் பின்னர் அதாவது 2025 | மேற்கூறப்பட்ட வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்கு 2025.01.22 ஆந் திகதி பணிப்பாளர் சபைத் தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக் கணக்குகளை மூடுவதற்காக வங்கிக்கு பணிப்பாளர் சபைத் தீர்மானத்துடன் form 20 பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். பணிப்பாளர் | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் உரிய வங்கிக் கணக்குகளை மூடி அந்த கணக்குகளை சரியாகத் தீர்த்து வைப்பதற்கும் |

| | | |
|---|---|---|
| சனவரி 22 ஆந் திகதி பணிப்பாளர் சபை தீர்மானித்து இருந்த போதிலும் கம்பனியின் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சபை விபரங்களை உள்ளடக்கி form 20 படிவம் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு வழங்குவதற்கு தாமதிக்கப் பட்டமையால் அதற்காக பொதுத் திறைசேரியின் பிரதிப் பணிப்பாளர் மாற்றமும் தாக்கமளித்து இருந்தது. எனினும் அந்த வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்குத் தேவையான கடிதம் மக்கள் வங்கிக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

#### 3.1 ஒன்றிணைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 241(1 ஆ) பிரிவின் பிரகாரம் கம்பனி ஒன்றிணைத்தல் செல்லுபடி ஆகும் ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஸ்தாபித்தல் தொடர்பான பரிசோதனை ஒன்றை (Solvency Test) நடாத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு இணங்கும் வகையில் முன்மொழிவுகள் கூறப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் முகாமைத்துவத்தால் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த நிதி ஸ்திரத் தன்மை தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் ஏனைய வ/ப லங்கா உரக் கம்பனி மற்றும் வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி முறையே வரிக்குப் பின் இலாபத்தில் ரூபா 21,161,837 மற்றும் ரூபா 43,913,037 தொகை 2025 மார்ச் 25 ஆந் திகதி இலாப பங்காக பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஒன்றிணைந்த கம்பனியின் நிதி ஸ்திரத் தன்மை தொடர்பாக பரீட்சிப்பதற்காக 2024.07.01 ஆந் திகதி ஒன்றிணைந்த கணக்குகள் தயாரிக்க வேண்டி இருந்தது. அந்த கணக்குகள் தயாரிப்பதற்காக கொழும்பு கொமேஷல் உரக் கம்பனி மற்றும் லங்கா உரக் கம்பனி 2024.06.30 இல் உள்ளவாறு கணக்குகள் (மூன்று மாதங்களுக்காக) தயாரித்து கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் கணக்குகளை சரியாக உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்குகள் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவ்வாறே எங்களுக்கு வழங்கப்பட்ட கணக்குகளில் சீராக்கங்கள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் சீராக்கங்களுடன் ஒன்றிணைந்த இறுதிக் கணக்குகள் கணக்காய்வு மற்றும் நிதி ஸ்திரத் தன்மை தொடர்பாக பரீட்சிப்பதற்காக விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஸ்திரத்தன்மை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

#### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5.1 மில்லியன் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய | கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் வ/ப லங்கா உரக் கம்பனியில் | ஊழியர் செயலாற்றல் |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியில் ஸ்தாபிக்கப்பட்ட ERP முறைமை மற்றும் மனித வள முகாமைத்துவத் தகவல் முறைமை (HIRIS) இற்கு மேலதிகமாக கம்பனியின் ஊழியர்களின் செயலாற்றலை மதிப்பிடுதலை மிகவும் முறைமைப்படுத்துவதற்காக தனியார் நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட Employee Performance Evaluation Module கொள்வனவு செய்வதற்காக பணிப்பாளர் சபைத் தீர்மான இலக்கம் 37 இன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த H2504 பேருடைய செயலாற்றல் முகாமைத்துவ முறைமை ஸ்தாபித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக ரூபா 550,000 மற்றும் வருடாந்த பராமரிப்புக்காக 2025 சனவரி 01 ஆம் திகதி முதல் 05 வருட காலத்திற்காக வருடம் ஒன்றிற்கு ரூபா 350,000 வீதம் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டதுடன் ERP முறைமை அபிவிருத்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது ஊழியர் செயலாற்றலை அளவிடுவதற்காக அந்த முறைமையில் திட்டம் ஒன்றைத் தயாரிக்காமல் ரூபா 2.3 மில்லியன் மேலதிகக் கிரயம் செலவிட்டு அதற்காக இன்னுமொரு மென்பொருள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த ஊழியர் செயலாற்றல் மதிப்பிடும் மொடியூல் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டு பெறுமதியில் 30 சதவீதம் அதாவது ரூபா 165,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்ட மனித வள முகாமைத்துவ தகவல் முறைமை அந்த முறையில் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கி இருந்தது. அதன் பிரகாரம் Victory information (PVT) Ltd நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 350,000 வருடாந்த பராமரிப்புக் கட்டணம் (Annual Maintenance Charge) இன் கீழ் அந்த முறைமை பேணிச் செல்லப்படுகின்றது. அதன் பின்னர் தற்போது காணப்படுகின்ற ஊழியர் செயலாற்றல் மதிப்பிடும் முறைமை ஒன்றுக்குப் பதிலாக மனித வள முகாமைத்துவ தகவல் முறைமை ஊடாக அமுல்படுத்தக் கூடிய செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் எமது நிறுவனத்தால் அந்த செயலாற்றல் மதிப்பீட்டு மொடியூல் (Performance Management Module) ஸ்தாபிப்பதற்காகவும், அபிவிருத்தி செய்வதற்காகவும் ஒரே தடவையில் மாத்திரம் செலுத்தப்படுகின்ற ரூபா 550,000 மூன்று கட்டங்களின் கீழ் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டது. அதன் போது அந்த முறைமை எமது கம்பனியின் கணனி முறைமைக்கு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மொத்தக் கட்டணத்தில் 30 சதவீதம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு மொடியூலை தயாரிக்கும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்கு களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | அரசாங்கத்தின் மானிய உரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழச்சித் திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை துறைமுகத்தை பயன்படுத்தி அம்பாந்தோட்டை, பதுளை, மொனராகலை மற்றும் | காணி கையளிக்கும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளரின் 2015 ஒக்தோபர் 27 ஆந் திகதிய மற்றும் இலக்கம் MDE/L/03/W/12 கடிதம் மூலம் நீண்ட கால வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை மகாவலி அதிகார சபைக்கு உரிய அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள காணியில் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,722,901 ஆரம்ப செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை எந்த ஒரு நிர்மாணம் மேற்கொள்ளவோ அல்லது மகாவலி அதிகார சபைக்கு மீண்டும் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அம்பாறை மாவட்டங்களுக்காக விரைவாக உரத்தினை பகிர்ந்தளிக்கும் நோக்குடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் பின்னர் மாணியக் கொள்கையை திருத்திய பின்னர் கம்பனி அந்த பிரதேசத்தில் களஞ்சியம் ஒன்று தேவை இல்லாது இருந்தது. தற்போது உரிய காணியும் மகாவலி அதிகார சபைக்கு மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2024 யூன் 30 இல் உள்ளவாறு இரண்டு கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ரூபா 548,567,043 வரிக்குப் பின் இலாபம் காணப்பட்ட போதிலும் கம்பனி ஒன்றிணைக்கப்பட்டு புதிய கம்பனியின் வியாபாரங்களை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் 2024 யூலை 11 ஆந் திகதி பத்தரமுல்லை வோட்டர்ஸ் எஜ் ஹொட்டல் வளவில் கோலாகலமாக நடத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 36,835,731 செலவினம் செய்யப்பட்டிருந்தது. எனினும் உரிய வியாபாரத்தை வெளிப்படுத்துவதன் மூலம் புதிய கம்பனியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட புதிய வியாபார சந்தர்ப்பம் ஒன்று கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐயவினாவின் மூலம் காண்பிக்கப்பட்ட பிரகாரம் 2024 யூன் 30 இல் உள்ளவாறு வரிக்குப் பின் நட்டமாக ரூபா 548,567,043 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்கு கட்டாய ஓய்வூதிய இழப்பீட்டு முறைமையின் கீழ் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டமை காரணமாக இருந்தது. கம்பனியை பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ரூபா 36,835,731 செலவினம் Waters Edge ஹொட்டல் வளவில் விழாவிற்காக செலவிடப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஹொட்டல் வளவு மற்றும் உணவுப் பாணங்களுக்காக ரூபா 3,431,912 தொகையும் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக Selacine Media Solutions நிறுவனத்தின் கட்டணமாக ரூபா 13,365,801 தொகை அந்த முழு விழாவிற்காகவும் ரூபா 16,797,713 தொகை செலவிடப்பட்டுள்ளது. ஏனைய செலவினங்கள் புதிய வியாபார பெயருக்காக விரிவுபடுத்தும் விளம்பரத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகங்களுக்கான விளம்பர செலவினங்களுக்காக செய்யப்பட்டிருந்தது. | சிக்கமற்ற செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லங்கா உர கம்பனியின் வளவு அலுவலக வளவில் பிரித்து (Partition) ஒதுக்குவதற்காக ரூபா 3,782,000 கிரயத்தில் தனியார் கம்பனிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு உரிய நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் 2025 யூன் 20, 2025 யூலை 21 மற்றும் 2025 ஆகஸ்ட் 01 என்ற இரண்டு திகதிகளில் நடாத்தப்பட்ட பெறுகைக்குழுக் கூட்டத்தின் போது நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் தெடர்பாக புதிய 19 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>அலுவலகங்களை பிரித்தல் (Partition) மற்றும் கதவுகளை இடுவதற்காக ஆரம்ப மதிப்பீடு மாற்றப்பட்டு தற்போதய பணிகள் கையளித்த ஒப்பந்தகாரருக்கும் அந்த பணிகளின் ஏனைய பிரிவுகளில் மேற்கொள்வதற்காக புதிய ஒப்பந்தகாரருக்கும் நிறம் பூசுதல், காப்பட் இடுதல், மின்சார வயர் வேலைகள் மற்றும் இணைய நடவடிக்கைகளுக்காக புதிய ஒப்பந்தகாரர் நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முறையான திட்டம் ஒன்று இன்றி அவ்வப்போது முகாமைத்துவம் எடுக்கின்ற தீர்மானத்தின் மூலம் கம்பனிக்கு தேவையற்ற கிரயம் மற்றும் காலங்களை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அலுவலகங்களை பிரிக்கும் நடவடிக்கைகளுக்காக கேள்வி கோரும் போது ஆரம்ப சந்தர்ப்பத்தில் இருந்து பணிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட (Partition) மாதிரியின் அடிப்படையில் கேள்வி தாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பிரிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது ஏனைய பணிகளுக்காக ஒப்பந்தகாரர் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>கணக்காய்வு ஐயவினாவின் மூலம் காண்பிக்கப்பட்ட பணிகள் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடான பணிகளாக இருந்ததுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சகல பணிகளையும் மேற்கொள்கின்ற ஒப்பந்தகாரர்களைக் கண்டறிதல் வசதியீனமாகும். நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அவதானிக்கப்பட்ட பிரகாரம் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடான பணிகள் அதற்கு பொருத்தமான திறன்களில் உடைய ஒப்பந்தகாரரை தெரிவு செய்து மிகவும் குறைந்த நலன்கள் காணப்படுகின்றமையால் தனித்தனியாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | முன் ஆய்வுடன் நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த கம்பனியின் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 2024/2025 நிதியாண்டிற்கு உரிய மூலதன பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் உரக் கலவை இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட போதும் நிதி ஆண்டு இறுதி வரையிலும் அவ்வாறான இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர் 2025/2026 நிதி ஆண்டில் | அரசாங்கத்தின் கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் 2025/26 நிதி ஆண்டிற்காக ரூபா 125 மில்லியன் தொகையொன்று கலவை இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் உரத்திற்கான திறந்த சந்தையில் கலவை உரம் விற்பனையை மேம்படுத்துவதற்கு அது காரணமாக இருந்தது என்பது முகாமைத்துவத்தின் | பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் குறித்துரைத்த காலப் பகுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாதீட்டின் மூலம் அந்த பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பதிலாக பெறுகைகள் மற்றும் தொழில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைகளுக்கு உரிய கேள்வி ஆவணங்கள் தயாரித்து பூர்த்தி செய்தல் இந்த இறிக்கை விநியோகிக்கப்படுகின்ற திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. முன்னர் காணப்பட்ட கம்பனியினால் நீண்ட காலம் முதல் கணிசமான கிரயம் ஒன்றைச் செய்து மனித வலு ஊழியத்தைப் பயன்படுத்தி உரக் கலவை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தக் கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னரும் உரக் கலவை இடும் பணிகளுக்காக மாத காலப் பகுதிக்காக அண்ணளவாக ரூபா 22,350,331 செலவிடப்பட்டிருந்தது. போட்டியாளர் திறந்த சந்தையில் விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எதிர்பார்ப்பாகும். தற்போது கலவை இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுவதுடன், கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள முறையில் அதன் மூலம் ரூபா 22 மில்லியனால் விற்பனைக் கிரயத்தை குறைக்க முடியாதுள்ள இயந்திரம் பயன்படுத்தப்பட்ட போதிலும் கலவை செயற்பாடுகளுக்காக தொடர்ந்தும் மனித வலு முறைமை மற்றும் மின்சாரம் தேவையாக இருந்ததை சுட்டிக் காட்டுகின்றோம். | |

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் நிலையான சொத்து சான்றுறுதிப்படுத்துதல், குறியீடுகள், நிலையான சொத்துப் பதிவேடைத் தயாரித்தல் மற்றும் மேலதிக நிலையான சொத்துக்களை இனங்காணப்பதற்காக பொருத்தமான விசேட நிபுனத்துவம் உடைய நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபை 2025 சனவரி 21 ஆம் திகதி அங்கீகரித்து அதற்காக கேள்வி கோரும் நடவடிக்கைகள் 2025 மார்ச் 18 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரிசுரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2025 யூன் 30 மற்றும் | அரச உரக் கம்பனிகள் 02 இனை ஒன்றிணைத்தல் 2024 யூலை 01 ஆந் திகதியில் உள்ளவாறு அமுல்படும் வகையில் ஒன்றிணைக்கப்பட்ட போது அந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் அநேகமானவை தொடர்ந்தும் அத் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் நிதிப் பிரிவினால் நேரடியாக பங்களிப்பு வழங்க வேண்டி நடவடிக்கைகள் அநேகமாகவும் கடந்த காலங்களில் வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. நாளாந்த நடவடிக்கைகளை பேணிச் சென்று 8000 இற்கும் அதிகமான நிலையான சொத்து அளவினை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக போதியளவான ஊழியர் தரப்பு காணப்படாமையினால் அதற்கான | புதிய கம்பனியின் நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்துதலை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2025 யூலை 29 ஆந் திகதி கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டு கேள்வி கையளிப்பதற்காக நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கம்பனிஇரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2021 நவம்பர் 16 ஆந் திகதி திறைசேரி செயலாளரின் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.7 இன் பிரகாரம் உரிய நிலையான சொத்துக்களை சான்றுறுதிப்படுத்தி கம்பனியில் காணப்படுகின்ற குறைவான பயன்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் ஒன்றின் பிரகாரம் சுயாதீன நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்து நியமித்தல் பொருத்தமானதாக இருந்தமையால் அவ்வாறான நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்காக 2025 சனவரி 21 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட KPMG நிறுவனம் பின்னர் ஒப்பந்தத்தில் இருந்து விலகிச் சென்றமையினால் இரண்டாவது நியாயமான பதிலளித்த கேள்விதாரருக்கு E&Y நிறுவனம் தெரிவு செய்து நியமிக்கப்பட்டதுடன் தற்போது அந்த நிறுவனத்துடன் ஒன்றிணைந்த நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | சுற்றாடலுக்கு இசைவான தேசிய உரத்தைக் கொள்வனவு செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2021/2022 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்படாமல் எஞ்சிக் காணப்படுகின்ற சேதன உரம் அம்பாறை, கொரவப்பொத்தானை, மதவாச்சி, நொச்சியாகம, பதுளை, மட்டக்களப்பு, தெஹிகஹலந்த, கோண்டாவில், ஹெங்குராங்கொட மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேசக் களஞ்சியத்தில் அதிக அளவில் காணப்படுகின்றமை 2025 மார்ச் மாதத்தில் நடத்தப்பட்ட வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2025 மே 08 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறு விற்பனை செய்யாமல் எஞ்சிக் காணப்படுகின்ற கூட்டுப் பசளை உரத்தின் அளவு மெற்றிக்தொன் 2,487 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 32,835,355 ஆகும். எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் | இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது வழங்கப்பட்ட பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் அந்த சேதன உரம் அரசாங்கத்தின் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எஞ்சிக் காணப்படுகின்ற கூட்டுப்பசளையின் அளவு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து பயனற்ற கிரயங்களை குறைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த உரம் தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் குறிப்பாக இனங்காணப்பட வில்லை. | | |
| (இ) | இந்த அறிக்கைத் திகதி வரையிலும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாத 2023 திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வரையில் காலாவதியாகி இருந்த பெறுமதி ரூபா 5,095,300 ஆன 500 மில்லி லீற்றர் கரைசல் உரம் 1,201 போத்தல்கள் கம்பனியின் களஞ்சியங்களில் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நெனோ நைட்ரஜன் போத்தல் பகிரிந்தளித்தல் தேசிய உர செயலகத்தின் பரிந்துரையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட போத்தல்களின் அளவிற்காக பரிந்துரை ஒன்று அல்லது அதற்காக உடன்படிக்கை ஒன்று காணப்படாமையினால் களஞ்சியத்தில் எஞ்சி இருந்தது. இந்த எஞ்சியிருந்த போத்தல் தொடர்பாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்து எங்களால் விவசாய அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய பசளை கரைசல் உரத்தின் அளவு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து பயனற்ற கிரயங்களை குறைத்தல் வேண்டும். |
| (ஈ) | புதிய கம்பனி ஸ்தாபித்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் செயற்திறன் தன்மை மற்றும் வினைத்திறன் தன்மையைக் கட்டியெழுப்பும் வகையில் பிரிவுகளின் தெரிவு திட்டங்கள் (Division Layout) தயாரிக்கப்படாது இருந்ததுடன் புதிய கம்பனியின் செயற்பாடுகள் பழைய கம்பனி இரண்டினதும் கட்டிடத்தில் பல்வேறு இடங்களில் தனித்தனியாக நடாத்திச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எனினும் கம்பனி ஒன்றிணைக்கப்பட்டு சகல உரிய பிரிவுகளும் திட்டமிடப்பட்ட வகையில் அந்தக் கட்டிடத்தில் பேணிச் செல்லும் தேவை தொடர்பாக நிலையான நிரந்தர மற்றும் ஆக்கபூர்வமான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு முகாமைத்துவம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதான அலுவலகம் அமைந்துள்ள லங்கா உரக் கம்பனி 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் உரிய பராமரிப்பு மேற்கொள்ளாது இருந்ததுடன் இதன் காரணமாக பிரதான அலுவலகக் கட்டிடம் உரிய வகையில் பராமரித்தல் மற்றும் நவீன மயப்படுத்தலின் தேவை எழுந்திருந்தமையால், தற்போதய பதவியணியினருக்கு பொருத்தமான வகையில் சகல பிரிவுகளும் மீளமைக்க வேண்டி ஏற்பட்டது. பெறுகைகள் ஊடாக இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பாதிப்பு ஏற்படாத வகையில் பழைய கம்பனியின் கட்டிடத்திலேயே நிதி மற்றும் விற்பனைப் பிரிவுகள் நடாத்திச் செல்லப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் பதவியணியினரை ஒழுங்குமுறையாக பிரதான அலுவலகத்தில் ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுவதுடன் திசெம்பர் மாதம் வரையில் சகல பிரிவுகளும் ஒவ்வொரு கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்கு | பிரிவுத் திட்டங்களை திட்டமிட்டு கம்பனியின் சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானிக்கப்பட்டுள்ளது. சகல நடவடிக்கைகளும் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடாத்திச் செல்லப்படுவதன் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டு இருந்தது. | |

### 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் 2024 யூன் 30 முதல் 2025 மார்ச் 31 வரை 09 மாத காலப் பகுதியில் ஹுணுப்பிட்டிய பிரதான அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளில் 61 சதவீதம் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை தேயிலை சபை, தெங்கு பயிர்ச்செய்கை சபை மற்றும் கமநல சேவை நிலையங்களுடன் மானிய விலைகளின் கீழ் அல்லது கடன் அடிப்படையில் உரம் வழங்குவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளாக இருந்ததுடன் கம்பனியினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட விற்பனையில் 39 சதவீதம் ஆன குறைந்த சதவீதம் ஒன்று பெறப்பட்டிருந்தது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பல வருட காலம் முதல் அரச உரக் கம்பனி நேரடியாக மானிய உர நெற்பயிர்ச் செய்கைக்காக பகிர்ந்தளிக்கும் கமநல சேவை நிலையங்களுடாக மேற்கொள்வதுடன் தனியார் கம்பனியின் நேரடி மற்றும் கலவை உரம் விற்பனை முகவர்கள் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டது. அரசாங்க கம்பனியாக நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க வேண்டியிருந்தமையால் மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் கவர்ச்சி கரமான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்த முடியாமையின் காரணமாக தனியார் பிரிவுகளின் ஊடாக விற்பனைகள் குறைவடைந்து இருந்தது. மேலும் உரப் பெறுகைகளின் கீழ் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் உரம் பெறுகை செய்ய வேண்டியிருந்தமையால் தனியார் துறையினை விட உயர்ந்த விலையில் அரச உரக் கம்பனிக்காக வழங்குனர்கள் முன்வந்து இருந்தனர். அதன் காரணமாக எமது கம்பனிக்கு கவர்ச்சிகரமான சந்தை கழிவுடன் விற்பனை முகவர்களுக்கு வழங்க முடியாது இருந்தமையும் நேரடியாக உர விற்பனை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாக இருந்தது. | கம்பனி தமது விற்பனை இலக்கை அடைந்து கொள்வதற்கான உபாய வழிகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் 2024/2025 நிதியாண்டில் 08 மாத காலப் பகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டில் அந்த காலப் பகுதியில் விற்பனை புரள்வு உரம் மெற்றிக்தொன் 54,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த காலப்பகுதியில் உள்ளபடியான விற்பனை | மெற்றிக்தொன் 20,000 யூரியா உரம் பெறுகைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு பெறுகைகள் வழிக்காட்டித் தேவையினை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக 2024/25 நிதியாண்டில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாது இருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த உரப் பற்றாக்குறை, விற்பனை வரையறுத்த | கம்பனி தமது பாதீட்டு இலக்கினை அடைந்து கொள்வதற்காக உபாய வழிகளை பின்பற்றுதல் வேண்டும். |

புரள்வு உரம் மெற்றிக்தொன் 21,907 ஆகும். எனினும் அந்த பாதீட்டில் விற்பனை மேம்படுத்துவதற்காக ரூபா 42,900,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் புதிய கம்பனி ஸ்தாபிக்கும் போது அந்தக் கம்பனியின் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 41 மில்லியனுக்கு அண்ணளவான தொகை செலவிடப்பட்டு விற்பனை தவிர விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கம்பனியால் விற்பனைத் தரகாக ரூபா 11,770,210 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த தரகுப் பணம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற தேயிலை உர விற்பனைக்காக செலவிடப்பட்ட செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

காரணமாக இருந்தது. புதிய கம்பனி ஸ்தாபிக்கும் போது அச்சிடல் மற்றும் இலத்திரனியல் ஊடாக விரிவான விளம்பரங்கள் வழங்கப்பட்டதுடன் அது நேரடியாக விற்பனை மேம்படுத்துவதற்கு தாக்கமளித்து இருந்ததை விருப்பத்துடன் அறியத்தருகின்றோம். அதன் பிரகாரம் கம்பனியின் மேம்படுத்தல் நடவடிக்கைகளின் போது அதன் வியாபார பெயர் பதிவின் கீழ் காணப்படுகின்ற உரமும் நேரடியாக மேம்படுத்தப்படுகின்றதையும் அறியத்தருகின்றோம். கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையிக் படி செலுத்தப்படுகின்ற செயற்பாட்டுச் செலவினம் தரகு பணமாக செலுத்தப்பட்டுள்ளதுடன் அந்த செயற்பாட்டு செலவினத்திற்காக செலுத்தப்படுகின்ற கொடுப்பனவாக சரியாக சரி செய்ய வேண்டி இருந்ததையும் அறியத் தருகின்றோம்.

(இ) புதிய கம்பனிக்காக வடிவமைக்கப்பட்ட Web இணையத்தளம் மற்றும் Facebook பக்கம் அந்த கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 2024 யூலை மாதத்தில் இருந்து நாளது வரையாக்கப்படாது இருந்ததுடன் தற்போது வரையிலும் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சமூக ஊடகங்களை அபிவிருத்தியாக பயன் படுத்தப்படுகின்ற பின்புலம் ஒன்றில் ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் Website, Facebook Page மற்றும் You tube போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளக் கூடிய விளம்பர நடவடிக்கைகளுக்காக கவனம் செலுத்தி விற்பனை பிரிவினை செயற்பாடுள்ளதாக உயர்

ஒன்றிணைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்டேட் பேட்டிலைசர் பெயருடைய புதிய இணையத்தளம் ஒன்று தயாரித்துக் கொள்வதற்காக கேள்வி திட்டம் ஊடாக அரச நிறுவனம் ஒன்றான செலசினே நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதன் போது அவர்களால் வடிவமைக்கப்பட்ட புதிய இணையத்தளம் 2025 யூன் மாதம் வரையிலும் எமது மாதிரிகளுக்கு இணங்க நாளதுவரையாக்க வேண்டி இருந்த போதிலும் அதன் நடவடிக்கைகளும் திடீரென செயலிழந்து இருந்தது. இது தொடர்பான பல சந்தர்ப்பங்களின் போது செலசின நிறுவனத்துடன் கூட்டங்கள் நடாத்தி கலந்துரையாடப்பட்ட போதும் அது தோல்வியில் முடிவடைந்தமையால் அந்த கம்பனியின் உத்தியோகபூர்வ இணையதள பக்கம் தொடர்பாக விவசாய அமைச்சின் தொழில்நுட்பப்

இணையதளம் ஊடாக விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு விற்பனை இலக்கினை அடைதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவம் ஆக்குவதற்கு உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | பிரிவின் உதவிப் பணிப்பாளரிடம் கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் படி நிறுவனப் பெறுகைத் திட்டத்தின் கீழ் பொருத்தமான நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்து புதிய இணையதளம் ஒன்றை வடிவமைத்து பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் You tube அலைவரிசையை நிர்மாணித்து பேணிச் செல்வதற்கும் உரிய மாதிரியைத் தயாரித்து பெறுகை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே Face book பக்கம் தற்போது செயற்படு நிலையில் காணப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றோம். | |

### 3.6 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விடுமுறை விடுதியை நிர்மாணிப்பதற்காக வ/ப லங்கா உரக் கம்பனியால் 2011 ஆம் ஆண்டின் போது கதிர்காமம் பிரதேச செயலாளருக்கு கோரப்பட்டு பெறப்பட்டிருந்த கந்தசூரிந்துகம கிராம சேவகர் பிரிவில் ‘‘கத்தரகம கெலய’’ என்ற பெயருடைய காணிக்கு உரிய ஹெக்ரேயர் 0.2024 அளவு ஒன்றை உடைய காணி கம்பனிக்கு சட்ட ரீதியாகக் கையேற்பதற்கோ அல்லது மீண்டும் கதிர்காமம் பிரதேச செயலாளரிக்கு சட்ட ரீதியாகக் கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடுமுறை விடுதியை நிர்மாணிப்பதற்காக வ/ப லங்கா உரக் கம்பனிக்கு கையளிக்கப்பட்ட கதிர்காமம் கந்தசூரிந்துகம கிராமத்தில் ½ ஏக்கர் காணி கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் ‘‘கந்தசூரிந்துகம’’ கிராம சேவர் பிரிவில் ‘‘கத்தரகம கெலய’’ என்ற பெயருடைய காணிக்கு உரிய ஹக்ரேயர் 0.2024 அளவினை உடைய காணிப் பகுதி சுற்றுலா விடுதியினை நிர்மாணிப்பதற்காக கதிர்காமம் பிரதேச செயலகத்தில் இருந்து கோரப்பட்டு பெறப்பட்டிருந்த போதும் இந்தக் காணிப் பகுதியில் உள்ள வீதியில் காணப்படுகின்ற பிரச்சனைகளின் காரணமாக விடுமுறை விடுதியை நிர்மாணிப்பதற்காக பொருத்தமில்லாது இருந்ததாகவும் அந்த நடவடிக்கைகள் கைவிடுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்த பின்னர் கதிர்காமம் பிரதேச செயலாளருக்கு காணி முறையான பிரகாரம் கையேற்குமாறு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காணி சட்ட ரீதியாகக் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் கருவலகஸ்வெவ பிரதேச செயலக பிரிவில் பகல புளியங்குளம் கிராம சேவகர் பிரிவில் இலக்கம் 638 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீல பெம்ம செயற்திட்டத்தின் கீழ் | நீலபெம்ம செயற்திட்டத்தின் கீழ் வ/ப லங்கா உரக் கம்பனிக்காக ஒதுக்கப்பட்ட இலக்கம் LB25-7A என்ற 25 ஏக்கர் காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் கருவலகஸ்வெவ பிரதேச செயலக பிரிவில் பகல புளியங்குளம் கிராம சேவகர் பிரிவில் இலக்கம் 638 | உரிய காணியை சட்ட ரீதியான கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்கம் LB25-7A என்ற 25 ஏக்கர் நில அளவை உடைய நீல பெம்ம செயற்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட காணி இதுவரை அந்த கம்பனிக்கு சட்ட ரீதியாக கையேற்பதற்கோ அல்லது சட்ட ரீதியாக கருவலகஸ்வெவ பிரதேச செயலாளருக்கு மீளக் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிராம சேவகர் பிரிவில் நீல பெம்ம செயற்திட்டத்தின் கீழ் LB25-7A என்ற காணிப் பகுதி வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனிக்கு ஒதுக்கப்பட்டதுடன் இந்த காணி பகுதியை சட்ட ரீதியான கையளித்தல் மேற்கொள்ளப்படாமையினால் இந்தக் காணிப் பகுதியை அபிவிருத்தி செய்தல் பொருத்தமில்லாது இருந்ததாக பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அந்த பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பின்னர் இந்தக் காணியை மீளக் கையேற்குமாறு கருவலகஸ்வெவ பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் காணி கையேற்கப்பட்டமைக்கு எமது கம்பனிக்கு கையேற்கப்பட்டதாக கம்பனிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

## 3.7 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 181 ஆக இருந்த போதும் உள்ளபடியான பதவியணியினர் 161 ஆகும். கம்பனி இரண்டிலும் 438 பேர் சேவையாற்றி இருந்தமையால் முன்னர் பயன்படுத்திய நிலையான சொத்துக்கள், கணனி, அது சார்ந்த உபகரணங்கள் மிகை தொடர்பாக புதிய கம்பனி ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை மற்றும் விளைவற்று பல்வேறு இடங்களில் பாதுகாப்பு இன்றி காணப்பட்டதுடன் அந்த சொத்துக்களில் மெய்மையாய்வு செய்து சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துவதற்கு அந்த சொத்துக்களை | நிலையான சொத்துக்களை சான்றுறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போதியளவான ஊழியர் தரப்பினர் காணப்படாமையினால் 2025 சனவரி 21 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் அதற்காக சுயாதீன நிறுவனம் ஒன்று பெறுகைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யும் போது இரண்டாவது நியாயமான பதிலளித்து இருந்த கேள்விதாரருக்கு E&Y நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அது வரையில் தற்போது நிறுவனத்துடன் ஒன்றுடன் இணைந்து உரிய நிலையான சொத்துக்களை சான்றுறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே நிறுவனத்திற்கு உரியதாகக் காணப்பட்ட மிகையான வாகனம் பெறுகைத் திட்டத்தின் கீழ் தற்போது பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் பிரதேச களஞ்சியத்திற்கு உரியதாகக் காணப்பட்ட நிலையான சொத்துக்களும் பொலன்நறுவை மற்றும் ஹுனுப்பிட்டி களஞ்சியங்களில் பாதுகாப்பாகக் | சொத்துக்களைக் சான்றுறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதுடன் சான்றுறுதிப்பட்ட பின்னர் அகற்றுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ளது. | |

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய கம்பனிக்காக அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 181 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 161 ஆகும். 20 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஸ்ட நிலையில் 10 பதவிகள், மூன்றாம் நிலையில் 05 பதவிகள், இரண்டாம் நிலையில் 01 பதவி மற்றும் ஆரம்ப நிலையில் 04 பதவிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனினும் புதிய கம்பனி ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் அங்கீகரிக்கப்படாது இருந்ததுடன் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் மேற்கூறப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தாபனப் பணிபாளர் நாயகத்தினதும், முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தினதும் அங்கீகாரத்துடன் அங்கீகாரம் இன்றி அங்கீகரிக்கப்பட்ட பதவி பேறுகளுக்கு புறம்பாக ஏனைய பதவி பெயர்கள் பயன்படுத்த முடியாது இருந்த போதும் தாபன விதிக் கோவை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக கணக்காய்வுத் திகதி வரையிலும் புதிய கம்பனியின் பதவியணியினர் பழைய கம்பனிகளில் பயன்படுத்தப்பட்ட பதவிப் பெயர்கள் பயன்படுத்தி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் DMS/1877 VOL-L என்ற 2024 திசெம்பர் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் புதிய கம்பனிக்காக 181 ஊழியர்களை உடைய பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். மேற்கூறப்பட்ட கடிதத்தின் ஆலோசனையின் படி எமது கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் இருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் முறையான பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக நியமிக்க வேண்டியிருந்தமையால் அந்த பதவிகளுக்காக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறை வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்று அனுப்புவதற்காக 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்தது. எனினும் இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. ஆட்சேர்த்தல் நடைமுறைக்காக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் புதிய பதவியணியினர் கட்டமைப்புக்கு உரிய பதவிகளுக்காக ஊழியர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் புதிய பதவியணியனர் கட்டமைப்புக்குரிய பதவிகளுக்காக ஊழியர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 35 ஆம் பந்தியின் பிரகாரம் குறுங்கால விடுமுறை அங்கீகரித்தல் 1½ மணித்தியால காலத்தை விஞ்சாத வகையில் மாதம் | முன்னாள் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் பிரதான அலுவலகம் கொழும்பு 01, சதாம் வீதியில் அமைக்கப்பட்டிருந்ததுடன் அந்த அலுவலகம் 2002 ஆம் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது பொது முயற்சிகள் |

ஒன்றுக்கு இரு தடவையாக இருந்த போதும் கம்பனியின் ஊழியர்களால் ஒரு வருடத்தில் ½ மணித்தியால வீதம் மாதத்திற்கு 06 குறுங்கால விடுமுறை பெறப்பட்டிருந்தது. இவ்வாறு குறுங்கால விடுமுறை பெற்றுக் கொள்ளும் ஏற்பாடுகள் 2025 பெப்ரவரி 25 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் கம்பனியினால் தயாரிக்கப்பட்ட பதவியணியினர் நடைமுறையில் உள்ளடக்கப்பட்டதுடன் அந்த பதவியணியினர் கோவைக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இதுவரை கிடைக்காது இருந்தமையால் அவ்வாறு குறுங்கால விடுமுறை பெற்றுக் கொள்ளல் இதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து ஊழியர்களால் எந்த ஒரு சட்ட ரீதியான ஏற்பாடுகளும் இன்றி பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ஆண்டில் ஹுனுப்பிட்டி மத்திய களஞ்சிய கட்டிட வளவில் ஸ்தாபித்து அலுவலக கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதான அலுவலகத்தின் சேவையாற்றிய அநேகமான ஊழியர்கள் கொழும்பில் இருந்து குனுப்பிட்டிய வரை புகையிரத் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கொழும்பில் இருந்து ஹுனுப்பிட்டி வரை போக்குவரத்து வசதிகள் வரையாக இருந்தமையாலும், தொடர்ச்சியாக தாமதம் அடைந்ததன் காரணமாகவும் சேவைக்கு அறிக்கையிடும் போது ஏற்பட்ட தாமத்தை மேவுகை செய்வதற்காக 1½ மணித்தியாலம் வீதம் குறுங்கால் விடுமுறைகள் இரண்டு, ½ மணித்தியாலம் அல்லது 01 மணித்தியாலமாக தேவையின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறே அரச உரக் கம்பனி இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட புதிய கம்பனிக்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களும் நீண்ட காலமாக உரிமை கோரியிருந்த வரப்பிரசாதங்கள் இழந்து செல்லாமையின் அடிப்படையில் ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக நிதி ரீதியல்லாத வரப்பிரசாதங்களாக கருதி குறுங்கால விடுமுறை பெற்றுக் கொள்ளும் திட்ட முறைமை தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டதுடன் மாதம் ஒன்றுக்கு 03 மணித்தியாலம் ஆகக் கூடிய எல்லையை விஞ்சாமல் குறுங்கால விடுமுறை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியின் தாபன நடைமுறைக் கோவையிலும் உள்ளடக்கி அந்த பணி நடைமுறையினை அங்கீகரித்துக் கொள்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு 2025.04.07 ஆம் திகதி அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டதுடன் இதுவரையும் அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே வரையறுக்கப்பட்ட

திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணி நடைமுறைக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | லங்கா உரக் கம்பனியில் 2024.11.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட பதவியணியினர் நடைமுறையிலும் இந்த ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| (அ) கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சின் செயலாளரின் பொது முயற்சிகள் சுற்றறிக்கை 01/2021 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகளுக்கான நிறுவனக் கட்டுப்பாட்டு வழிகாட்டின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டினை உள்ளடக்கி 05 வருட காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைந்த திட்டம் உரிய அமைச்சின் செயலாளரின் மூலம் திறைசேரி செயலாளருக்கு அல்லது தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரே ஒரு உரக் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றிணைந்த புதிய கம்பனிக்கு உரியதாகக் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் ஒன்று மேற்கூறப்பட்ட பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>எனினும் புதிய கம்பனிக்கு உரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் பணிகள் ரூபா 4,950,000 தொகையில் வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டதுடன் அதில் 60 சதவீத அளவு அதாவது ரூபா 2,970,000 தொகை 2025 சனவரி 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | ஒன்றிணைந்த கம்பனியின் 05 வருட காலத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடுவதற்காக பெறுகை செயற்பாடுகளின் கீழ் பொது நடைமுறையின் கீழ் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டதுடன் அவரால் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கம்பனியின் ஒன்றிணைப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட குழுவின் நிதி அமைச்சு உத்தியோகத்தரின் பங்குபற்றலுடன் கலந்துரையாடப்பட்டதுடன் மேலதிக கவனம் செலுத்துவதற்காக அவரால் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலின் போது கூட்டிணைந்த திட்டத்தில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை மீண்டும் தயாரித்து வழங்குமாறு உரிய ஒப்பந்தகாரருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அது வரை வழங்கப்பட்ட தொகையின் சதவீதம் வழங்கப்பட்டிருந்தது. | புதிய கம்பனிக்கு உரிய கூட்டிணைந்த திட்டம் முறையான பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| (அ) கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் 01/2021 | ஒன்றிணைந்த கம்பனிக்காக புதிய மென்பொருள் முறைமை ஒன்று | குறித்துரைத்த காலப் பகுதியில் வருடாந்த |

| | | |
|---|---|---|
| என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப் பட்ட செயற்பாட்டு கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 05 மாத காலத்திற்குள் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கையை உள்ளடக்கி வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் 2024/2025 நிதியாண்டு முடிவடைந்து 08 மாத காலம் கடந்திருந்த போதும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வில்லை. | அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அந்த முறைமைக்காக தரவுகளை உள்ளடக்குவதில் சில தாமதம் ஏற்பட்டது. தற்போது இறுதிக் கட்டத்தில் கணக்குகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விரைவாக அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கணக்காய்விற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர் மிக விரைவாக வருடாந்த அறிக்கை தயாரித்து அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும். | அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். |